ஓலை 153| ஓசை 276| டிசம்பர் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## பேராசிரியர் சாலை இளந்திரையன்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்

## பொருள்

இச்செயலை நம்மாலே செய்ய முடியாதென்று தளர்ச்சி கொள்ளாமல் இருக்கவேண்டும்; இடைவிடாத முயற்சியானது அதனைச் செய்து முடிக்கும் வலிமையைத் தரும்


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு!

பாவகை : இன்னிசைச் சிந்தியல் வெண்பா

வானமெக்கைக் கன்னில் வகையாகக் கார்முகில்
ஆன வரையில் அழகாய்ப் படுத்துறங்கும்
ஞானத்தைப் பெற்றுறங்க நாடு.


மலைமுகட்டு மெத்தையில் வெண்மேகம் நித்தம்
அலைந்தே படுக்கும் அழகாக மாந்தா
தலைச்சாய்த் துறங்கு தணிந்து,

மலைக்கோயில் தன்னில் மருகன் அழகாய்
நிலைத்துறங்கும் பாங்கிலே நீடுதுயில் கொள்வாய்
அலையாது நெஞ்சமுறங்க ஆம்.

ஏழை எளியோர்க்கும் என்றும் உழைப்பவர்க்கும்
வாழை இலையாய் வழுக்குகின்ற மெத்தையில்லை;
ஏழைக்கு மண்தரையே ஏன்?

பகலில் உழைப்பவர்கள் பாங்காய் உறங்க
அகம்மகிழ்ந்தே நல்லுறக்கம் அன்றாடம் பெற்றிடவே
உகந்தமெத்தை இல்லை உணர்.

உடல்வலி நீங்கிட ஊக்கமும் பெற்று
கடல்மேல் அலையாய் அயர்ந்துறங்க வேண்டும்
மடல்மேல்நீர் போலுறங்கல் மாண்பு.







**இலக்கணக் குறிப்பு:**

மேலே உள்ளப் பாக்கள் இன்னிசைச் சிந்தியல் வெண்பாக்கள். இரண்டு அடிகள் நான்கு நான்கு சீர்களையும் மூன்றாமடி மூன்று சீர்களையும், மூன்றாமடியின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்ற வகைப்பாட்டில், கு, சு, டு, து, பு, று என்னும் உகர ஓசையில் முடிந்தவைகள். இன்னிசைச் சிந்தியல் வெண்பாக்கள் தனிச்சீர் இன்றி வரும். மூன்றடிகளும் ஒரெதுகைப் பெற்று, அடி தோறும் முதல் சீரும் மூன்றாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று வந்துள்ளன. சீர்கள் தோறும் காய் முன் நேர். நேர் முன் நிரை, நிரை முன் நேர் வந்து, வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் வந்து செப்பலோசையில் அமைந்துள்ளன.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

**பா வகை: அறுசீர் மண்டிலம்**
**(மா+விளம்+ விளம்+விளம்+விளம்+காய்)**

மறையும் ஒழுக்கமும் மலர்ந்திட செழிக்குமே
வாழ்வதும் சீருடனே
அறமாம் அதனையே அகத்தினில் ஓதிட
அழகதும் தோன்றிடுமே
நிறையாய் மறையவர் நிலைகளும் கொண்டிட
நிலைக்குமாம் பேறுகளே
சிறகும் முளைக்குமே சீரிய மனத்திலே
சிறப்புடன் தொடர்கையிலே

எல்லா பொருளுமே ஏற்றமாய் விளங்கிடும்
எழிலென மறைகளிலே
இல்லல் கடந்திட இரும்பென உள்ளமும்
இறுக்கமாய் பற்றிடுமே
எல்லா மறைகளும் இயம்பிடும் பொருளதாம்
ஏற்றுக அன்பினையே
நல்ல மனநிலை நயமுடன் பூத்திடும்
நாடிடும் மறைகளினால்

அன்பும் தன்நிலை அறிந்துதான் தகர்த்திடா
ஆளுமை அழகாகும்
இன்பம் விளைந்திடும் இனியவை விதைக்கையில்
இட்டது பிறழ்ந்திடுமா
மென்மை நடையிலே மேன்மையும் அடையலாம்
மிளிர்ந்திடும் மறைபற்ற
கன்னல் மறையினை கருத்திடன் போற்றிட
கரும்பென இனித்திடுமே




கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

# இருப்பு

அகர முதல

நானங்கு
வரும் நேரத்தில்.
நீங்களும்
அவசியம் இருங்கள்.
எனக்கு
எதுவும் தெரியாதென்று
இலாவகமாய்
தப்பிக்கும் வாய்ப்பினை
நீங்களாகவே
நிரப்பிக் கொள்ளாதீர்கள்.
பின்வரும்
திடமான அன்பையும்
அடத்தியான மகிழ்வையும்
நீங்கள் இழந்து போனதற்கு
நான் காரணமில்லை என்பதை
அப்போதுதான்
உங்களால் பூரணமாய்
தெரிந்து கொள்ள முடியும்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# விடியல்

பாரதி கண்ட காக்கையும் குயிலும்
ஆற்றங்கரையில் சிறகுகளை உலர்த்தி
ஆகாயவெளியில் உலாப் போக.

வாழ்க்கைப் படகின் துடுப்புகளைத் தேடி
ஓய்ந்துபோன கால்கள்
ஓசையின்றிய மரணத்தில்
ஒய்யாரமாய் ஓய்வுபெறுகின்றன.

விடை தேடும் பயணத்தில்
விடியல் தேடும் விட்டில் பூச்சியாய்
தடைகளோடே பாதை நீள.

நேற்றைய எதிர்பார்ப்புகளை
துரத்திக்கொண்டே விடிகின்றன
ஒவ்வொரு விடியல்களும்.

தகிக்கும் வெயிலில் கூடையிலுள்ள
அத்தனை பூக்களும் மலர்ந்து சிரிக்க
வாடி நிற்கும் பூக்காரியின் கோரிக்கை
ஒன்று தான்

"நாளைய விடியலாவது
நல்லதாய் வேண்டும்"



கவிஞர் பாத்திமா ரஸீபா முபாரக், இலங்கை

# புகை உயிருக்குப் பகை!

உனக்குக் கேடு! உளுத்துப்போகும் கூடு!
தனக்குத் தானேயே தணலிடுவதா கூறு?

ஆறறிவு படைத்த ஆளாகவே இருந்தாலும்
கூறுகெட்ட வாழ்வுக்கு குடை பிடிப்பதாரு?

வித்தைகள் நூறாக்கும் விரல்களின் இடையில்
சத்தமிலாது வெண்சுருட்டோ சங்கறுக்கும் பாரு!

சுயபோகம் பழகுவதால் சுயமழிந்தே போகும்!
பயமழித்து முழுதாகப் பாதகத்தையே கூட்டும்!

ஆற்றுப்படுத்தவே உண்டு ஆயகலைகளோ பேறு!
ஊற்றுக்கண் போலவே ஊறுதனைச் சேர்ப்பதாறு?

பாடுபட்டு நோகுமுயிர் பாடைக்கே பரிசோ?
கூடுவிட்டு போகுமுயிர் குறை ஆயுளோடு!

வீடுதனில் உறவுகள் வினைகளால் வேகும்!
நாடிதுவோ இழக்கும் நன்மக்களின் வரிசை!

உழல்வதன்று வாழ்வு! உழைத்து முன்னேறு!
உணர்வாயே புகைதான் உயிருக்குப் பகையே!



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# முண்டாசு கவிஞன்

கவிஞர்களின் கவிதையே
வார்த்தைகளின் வாழ்க்கையே
எங்களின் பாரதியே

பெண் விடுதலை வேண்டி
பூகம்ப கவிதைகள்
கண்ட காவியமே

சாதியின் வேர்களை
பிடிங்கி எறிய வார்த்தைகளை
சாட்டையாக்கிய சரித்திரமே

எல்லோரும் காற்றை சுவாசிக்க
நீ மட்டுமே தினந்தோறும்
கவிதைகளை சுவாசித்தாய்

உந்தன் கவிதை வரிகளால்
வெள்ளை காகிதங்களும் அனல்
கக்கும் அதிசயங்களாய்

ரௌத்திரம் பழக சொன்ன
பாரதியே உந்தன் முகவரியில்
நாங்கள் இன்று முகங்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# வேல்விழியாளே

வில்லம்பு தேவையில்லை
சொல்லம்பால் வீழ்த்திடு
இமையசைவால் ஈர்த்தே
இளமையை கொல்கிறாயே

கார்குழல் காரிகையே
கவர்ந்திட்டாய் என்னையே
படைகளை வென்றவன்
பாவையிடம் தோற்கிறேன்

தென்றலாய் வருடியே
புயலானாய் என்னுள்ளே
நித்தமும் பூகம்பம்
நினைவுகள் யாவிலும் நீயே

காதல் யுத்தமதில்
சரணைந்தேன் உன்னிடமே
வேல்விழியாளின் பார்வையில்
வேந்தனும் பித்தனானேன்

கூரிய அம்புகள் எய்து
இதயத்தை துளைத்தாயே
வேதனை ஏதுமில்லை
அன்பான காதலியே


சாதனை படைத்தவன்
சமாதானம் அடைந்தேனே
ஆரணங்கின் எழிலில்
ஆனந்தம் உண்டாகுதே

மகிழ்வான மங்கையே
நெகிழ்வானது கங்கையே
எண்ணங்கள் அலைமோதிட
வண்ணங்களில் கலந்திடுதே

உனதாட்சியில் எனது
அரசாங்கம் அடைக்கலமே
இலக்கிய நாயகியே
இலக்கணமான பாடமே

நளினத்தில் நாட்டியமாடும்
நங்கையின் தேகமே
அளவில்லா மோகத்தில்
தீர்ந்திட்டது தாகமே

எழிலான ஏந்திழையே எந்நாளும்
இணைந்தே இருந்திடுவாயே



கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# புணர்ச்சி விதும்பல்

## அதிகாரம் : 129

நினைத்ததும் களித்தலும்
கண்டதும் மகிழ்தலும்.
காமமுடையவர்க்கே அன்றி
கள்ளுண்டவர்க்கும் இல்லையாமே.

என்நெஞ்சே உனக்குள்
பனையளவு காமமிருந்தினும்.
தினையளவும் உன்னவனுடன்
மனங்கோணல் கூடாதே.

என்னவன் எனைவிடுத்து
தன்மனம்போல் நடந்திடினும்.
என்விழிகள் அவன்காணாது
இருந்திடல் இயலாதே.

என்னவனின் பிழையெண்ணி
சினந்து ஊடநினைந்தவள்.
அவனழகு முகங்கண்டதும்
மனங்கனிந்து முயங்கிட்டேனே.

விழிகளில் மையிடுகையில்
தூரிகையைக் கண்காணவில்லை.
காதலனைக் கண்டதுமவன்
தவறுகள் மறக்கின்றேனே.

என்னவனைக் கண்டிட்டால்
குற்றமதை மறக்கிறேனே.
அவனில்லாப்பொழுது அவன்
குற்றத்தையே காண்கிறேனே.

அடித்துச்செல்லும் என்றறிந்தும்
வெள்ளத்தில் குதிப்பவன்போல்.
அடிக்கடி நிகழ்வதறிந்தும்
ஊடல்கொளல் என்னபயனோ?

இழிவுதரும் கள்ளதை
இன்னுமின்னும் குடிப்பார்போல்.
கழித்தென்னை வெறுத்திடினும்
உனைவிரும்புதே என்மனமே.

பூவினும் மென்மையுடைய
காமத்தின் தன்மையறிந்து.
தேனினும்மேலாய் அனுபவிப்பவர்
பூவுலகில் ஒருசிலரே.

கண்களது ஊடலாயினும்
காதலன்கண்ட கன்னிமனமோ
காற்றிலேறி வந்து
அவனைத் தழுவிக்கொண்டதுவே!



கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

விழி மெல்ல விலக
வளைந்த நெஞ்சம்
உதடுகள் உதிர்த்த மொழி
உள்ளத்தை தீண்ட
உறங்கா நினைவுகளுடன்
காத்திருக்கிறேன்.

காட்சிப் பிழையா?
கனவுப் பிழையா?
காலத்தின் பிழையா?
காத்திருக்கும் மனம்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

மனிதனை மனிதன்
மதிக்க வேண்டும் என்பது
மண்ணில் தோன்றிய விதி.
மதிக்க மாட்டேன் என சொல்வது
கபாலத் தோட்டத்தில் கள்ளிச் செடி
முளைத்தவர்கள் செய்த சதி.
தகர்க்கபட வேண்டும்
தரணியில் தனியுடைமை.
பொறிக்கப்பட வேண்டும்
வரலாற்றில் பொது உடைமை.

இருப்பதை கொடுத்து
இன்பம் பெறுதல் பேரின்பம்.
இருப்பதை தராமல் கருமியாய்
இருப்பது பெரும் துன்பம்.


சுயநலம் கொஞ்சம் சுருக்கி
பொது நலம் அதிகம் பெருக்கி
வாழ்வில் ஈகையை வகுத்து
வையகத்தின் வருத்தம் கழிப்போம்.
வாழ்தல் வாழ்தல் இனிது
பிறருக்காக வாழ்தல் இனிது.
பிரபஞ்சத்தில் வாழ்தல் என்பது
பெரிது. பெரிது.
வானம் என்பது மனம் வசிக்கும் வீடாகட்டும்.
சமத்துவப் பறவைகள் வசிக்கும் கூடாகட்டும்.
இருப்பவர்கள் கொடுக்கட்டும்.
இல்லாதவர்கள் எடுக்கட்டும்.
ஓடும் நதி உலகிற்கு பொதுவானது.



பாடும் குயிலின் குரல்
பாருக்கே சொந்தமானது.
வாடி உதிரும் முன்
வையகத்திற்கு செய்திடு நன்மை.
வாழ்க்கை முடிந்துவிட்டால்
எதுவும் நமதில்லை என்பதே உண்மை.

கவிஞர் முனைவர். முனியாண்டி, திருவில்லிப்புத்தூர்

# மலைகளின் மகிமை



உயர்ந்த மலையும் உயர்வான சிறப்பாய்
பெயராமல் கொடுத்திடும் பெருமையின் சிறப்பே
காற்றைத் தடுத்து கருத்தான மேகத்தோடு
ஆற்றில் விழுமாறு ஆர்பரிக்குமே சத்தத்தோடே

இயற்கை வரமாய் இனிதே அளிக்கும்
செயற்கை தவிர்த்து செய்வோமே புதுயுகம்
கோடான உயிர்களின் கோயிலாய் விளங்கும்
நாட்டைக் காத்திடும் நலமான உறவே

அரணாய் விளங்கும் அற்புத பெருக்காய்
கரமான செல்வத்தின் கருணைச் சிறப்பே
மரங்கள் செழித்து மண்வளம் காக்கும்
உரமான செல்வமாய் உள்ளத்தில் நிறைந்ததே

விலங்குகள் காப்பகத்தின் விசித்திர வளமாய்
நலங்கள் பெருக்கும் நம்பகத்தின் மகிமை
மூலிகை அளிக்கும் முக்கால சுவையாய்
வேலியாய் காத்திடும் வேண்டுதல் அறமே

நாட்டின் பாதுகாப்பை நலமுடன் கொடுத்து
வீட்டில் நிம்மதியாய் வசிக்க உதவிடுமே
நலம்பல நல்கும் நயமான உறவாய்
புலமாய் விளங்கி புகழ்ச்சி தந்திடுமே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

# என்னவனும் நானும்


ஏனோ தேடியே தொலைகிறான்.
கடந்த பாதை
மீண்டும் வரவும் போறதில்லை
வந்திட வாய்ப்பும் இல்லை..
எதை தான் தேடி அலைகிறான்.

அவனைப் புரிந்திட முயலுகிறேன்
ஏனோ அவன் என்னவன்
என்பதாலோ என்னவோ
கொஞ்சம் இல்லை
நன்றாகவே வலிக்கிறது.

வலியில் முழி பிதுங்கி
வழி தடுமாறி பதற்றத்தில்
சினத்தில் நா மொழிய
மீண்டும் பாரம் தான்
அவனுக்கும் எனக்கும்.

கண்டும் காணாது வாழ்ந்திட
வலியில் கடக்கின்றன
வெற்று வட்டத்தில்
சிந்தனையும் அவனைச் சுற்றி
காதலும் அவனைச் சுற்றி
காலமும் அவனைச் சுற்றி
காமமும் அவனைச் சுற்றி

அவன் தேடல் அவனுக்கு
ஆறுதலைத் தருகிறது போலும்.
ஆயினும் அவன் தேடல்
என்னைச் சுற்றியே இருந்திட
எண்ணி காத்திருக்கும் காதலின்
எண்ணம் கொல்லுதடா.



இருப்பினும் விழி நீர் கதுப்பில்
தழுவாமல் மறைத்தே இருக்கிறேன்.
அவனுக்கு நானும் முக்கியம்தான்.
எங்கு தொலைத்தாயோ அங்கேயே
காத்து கிடக்கிறேன்.
உயிருடன் இருந்தால் அள்ளி
ஆறத்தழுவிடு உயிரே.


நீ எங்கு சென்றாலும்
உன் பாதம் தொடர்ந்து
உன் விரல் பிடித்து
உன் வாசனை நுகர்ந்து
உன் காதலை எனக்கென எண்ணி
எவருக்கும் பகிராமல்
என்னுடனேயே வைத்து பூட்டி
இதழோர புன்னகையில்
உன் பேச்சை உற்று பார்த்தே
இரசித்தே தொலைகிறேன்

நான் என்றும் உன்னிலேயே.

கவிஞர் கார்த்திகா. சு, பழநி

# நினைவில் நீயே

முன் சென்றவளை
பின் தொடர்ந்தேன் அன்று
இன்று நானே நினைத்தாலும்
அவளை மறக்க முடியவில்லை
எண்ணி பார்க்கிறேன் என்னையே
அவளிடம் முழுவதுமாய் தொலைத்து
வலுவிழந்து அவள் நினைவாகவே வாழ்கிறேன்
காலம் போகும் போக்கில் கால் தடங்கள்
அவள் என்னை நிராகரித்தாலும்
அவள் மீதான நான் கொண்ட காதல்
என்றும் மாறாது
முதலாகவும் முடிவாகவும் நீயே
என் உயிரின் நிலவே!



கவிஞர் முனைவர். அக. வீரவன்சூரா, சிதம்பரம்

# வாழ்க்கை

பந்தயமா வாழ்க்கை
பக்கத்திலிலுள்ளோரிடம் போட்டியிட
பந்தபாசமிக்கதே வாழ்க்கை

பரிவோடே, பாரம்பரியத்தையும்
பணிவோடு கொடுத்திட்டால்
பலுவான வாழ்வுமே சுலபமாகுமே

பணமென்னும் காகிதம் தேடி
பரதேசமும் ஓடினாலுமே
பகுதியான உறவுகளோடு

பக்தியான பாதி வாழ்க்கை
பகுத்தறிவு மனிதா நீயும்
பட்டறிவு பெற்றதுமே

பச்சோந்தியாய் வாழ்வதற்கா?
பட்டங்களும் பெறதான் ஓடினாயே
படிப்போடு நீ பெற்றதன்னவோ?

பதவியையும் தான் தேடிச்சென்றாயே
பட்டாம்பூச்சியாய் பறந்தாயே
படபடத்து வெடவெடத்தே
பயத்தோடு ஓய்ந்தாயே

பலமான பெற்றோரையும் மறந்தாயே
பலவீன நேரமதில் அதை நினைந்தாயே
பணிவிடை செய்ய ஆள் தேடினாயே

படைத்தவனின் முடிவிலே
பரிசு உனக்கு கிடைக்க
பசித்தோர்க்கு ஓர் பிடி உணவு நீ கொடு,



பஞ்சாய் மனதை இளகுவாக்கு
பழுதில்லா வாழ்விற்கு வழிகோலுவாய்
படுக்கையிலே நீ நினைக்கையிலே

பலியாகிடுவாய் படிப்படியாய்
பவித்ரமானதே உன் ஒரு வாழ்வுமே
படுத்திடாதே மற்றவரையும்

பரிகாசமாகிடுவாய் படுந்துன்பத்திலே
பதிலுமே உன் வாழ்வின் இறப்பிலே
பதமான வாழ்வது இதமாவது
பகட்டில்லா உன் ஓட்டப்பந்தயத்திலே

பக்கம் பார்த்து நின்று பேசி
பதவிசாய் புன்னகையுடன் நேசி
பரம்பிரம்மனின் அருளாசி உனக்கே!

கவிஞர் நீலா சுபாஷ், ஆக்கூர்

# ஒரு சிறிய ஏக்கம்

நீட்சியடையும் நாட்கள்
யாவற்றிலும்
ஒழிந்து கொண்டிருக்கிறது
ஒரு நெடுநாள் காத்திருப்பு.

அனைவர் வாழ்விலும்
அடைக்கலமாகிக்
கொண்டுதான் இருக்கிறது.
அன்பானவர்களின் குரலிற்காக
தொலைவில் இருந்து
ஒரு சிறிய ஏக்கம்



கவிஞர் சுமையா சத்தார், அனுராதபுரம் (இலங்கை)

மரபு வளம் மறந்த
சொந்த கதை நான் சொல்வேன்.
பட்டினி சாவிற்கும்
உழைப்பின் சுரண்டலுக்கும்
களம் கண்ட வதை வலைகளை
தூக்கி எறிய பேராடி
எம் முன்னோர் வழி
பதவி மரியாதை என்று
கைக்கட்டி சாலம் செய்து
சாதிக்க முனைவதற்கு
இனத்தின் அடையாளம்
பெயர் கூறும் புறமுதுகிகள் என்று
தயவு தாட்சணை பாவம் புண்ணியம்
பார்த்து எவரும்
இங்கு ஒரு அடி இட வேண்டாம்
எம் உரிமைச்சாவும் தமிழ்தாய்
மக்கள் பணி செய்து இருக்கும்.

தாய்-சேய் உறவில் சமூக நலன்
உரிமை வாழ்வை பாலுட்டும்.
தலைமுறைக்காக்க உதவா
கல்வி அவசியமற்றது.
கற்று நிலை அடைந்து
நீ திரும்பிப்பார்க்கும்.
உன் சமூகம்
பாதாளத்தில் இருந்து.
நீ கற்ற கல்வி
நிலையான ஓர் துளி மாற்றத்திற்கு
வழி வகுத்தது என்றால்
மகுடம் சூடும் உன்
பட்டங்களும் தகைமைகளும்
தக்கண பிழைக்கும் கணம்
தன்னுணர்வில் சமூகம் நோக்கிய
உன் பாதை சிறக்கும்.



மனிதனாய்
மாண்பு போற்றும் மனிதம் காக்கும்
உள்ளம் கொண்ட எம்மருக்காக.
மக்களின் மனமறிந்த பயணங்கள் தொடரும்.

கவிஞர் வியாத்தன்

# மனிதரும் மனித நேயமும்

அறிவுப் பெருங்கடலின் ஆழகடலை அளக்கும்
அற்புத மனிதா உன்னை போற்றுவோம்

உதவி கரங்கள் உள்ளவரை உயிர் வாழும் மனிதம்
மனிதன் நேயமாக உயர்ந்ததுவே
மனிதனை மனிதனாக வாழ வைத்திடுமே

மனிதத்தின் அடையாளங்கள் பலவே
அன்பு காட்டிலேயே முதன்மை நேயமே

மற்றவை அனைத்தும் தானே கிடைத்திடுமே
யாரென்று பாராது அவர் கண்ணீர் துடைக்கும்
உறவே மனித நேயம்

ஆயிரம் அறிவுரை கூறுவதை விடவே
ஒரு ஏழைக்கு உதவுபவனையும் மனிதன்

உடலை அழகு படுத்திட முடியும்
குலத்தை அழகுப்படுத்த தேவை மனித நேயம்

கலப்படங்கள் உருவானது தேவைகள் அனைத்திலும்
அவற்றை உருவாக்கியது மனிதநேயமா

மனிதரில் உண்டோ கலப்படம்
மனித நேயத்தை விட்டதால் உருவானதே
முதியோர் இல்லம் பூமி எங்கும்

அன்னை தெரேசா பாரி வள்ளலார் வாழ்ந்திட்ட
வரலாற்றை கேட்பாய் மானிடா நீயும் மாறிட

மனிதன் நேயத்தை தமக்குள்ளும்
வளர்த்திடுவாய் மனிதனாய்



கவிஞர் ஏ எம் முர்ஷிதா, கண்டி (இலங்கை)

# வாலிபம்

கையில்
கணினி இருக்கிறது

இளைய ரத்தமும்
இணைய வழியும்

பாதை காட்டும்
எல்லா கேள்விகளுக்கும்

என்ற நினைப்போடு
பல கனவுகள் பல

இலக்குகள் இருந்தாலும்

உறவினர்கள்
அன்பு என்னவென்று

அறியாது பயணிக்கிறது
இன்றைய தலைமுறை.


சற்றே மாற்றி குடும்ப
உறவுகளை அடையாளம்

காட்டி தாயின் கடமையை
இன்னும் சிறப்பாக வழி

வகுத்து வழிநடத்த
இவர் உன் சித்தப்பா, இவர்

உன் பெரியப்பா ,சித்தி
என்ற உறவுகளை

அடையாளம் காட்ட
சந்திப்பு விழா நடத்தி



சந்ததியை சிறப்பாக்குவோம்
தொடர்ந்து பயணிப்போம்

இறைவனின் துணையோடு

மாற்றத்தை நோக்கி புதிய பயணத்தில்
நானும் உங்களுடன் என்றும் மகிழ்ச்சியுடன்

கவிஞர் ஜெ. தேவிராஜசேகர், செங்கல்பட்டு மாவட்டம்

சூழ்நிலைக் கைதிகள்
சுதந்திரமாய் சுற்றித் திரிகிறார்கள்
விலைமாதர்கள்

வயலின் வரப்பிலமர்ந்து
வயலின் வாசிக்கிறான்
விவசாயி மகன்

இப்போதெல்லாம் அடிக்கடி
தாயைப் பார்க்கச் செல்கிறான்
மண்ணறைக்கு

அடைமழை
காய்ந்து கிடக்கிறது
ஏழையின் வயிறு

மரணச் செய்திகள்
மகிழ்வைத் தருகின்றன
சவப்பெட்டிக் கடைக்காரருக்கு



கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயில், நமடகஹவத்த (இலங்கை)

# முல்லைப் பூவே கல்லில் படராதே

உரக்கத்தான் சொல்லிடினும் பயனும் உண்டா ;
உணர்ந்திட்டே மகிழ்வாரா காது கேளார் !

இரக்கமிலார் நாடிப்போய் வள்ளல் என்றே
இன்புறவே பாப்புனைதல் வீணாம் செயலே !

சுரப்பில்லா குளம்தன்னில் நீரும் கொட்டி
சுழன்றாடி குளித்தலிலே இன்பம் உண்டா !


பரபரக்கும் மாந்தர்க்கு யோகம் தியானம்
பயிற்சிகளில் ஈடுபட ஆவல் வருமா !

வரமருள வந்துள்ள ஈசன் அருளும்
மருவிவந்த வாய்ச்சொல்லால் மாறும் தானே !

அரைத்திட்ட சந்தனத்தின் பயனும் வீணே ;
அருமையான வாசத்தை நுகரா வேளை !

கரைபுரண்டு ஓடுமாற்றை நீந்திக் கடக்க
களிப்புடனே இறங்கிட்டால் வாழ்வும் ஏது !

வரம்பறிந்தே உறவு கொண்டால் இழுக்கும் இல்லை ;
மாண்பெல்லாம் கூடி வரும் எல்லை இல்லை !



கவிஞர் ஆ ச கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# நம் உரிமை

பல்கலை கற்றிடிடவே எண்திசை எங்கும் இருந்து
ஓரிடம் கூடிவிட்ட வேடந்தாங்கல் பறவையினங்கள்.
சாதியின்றி பேதமின்றி ஊடலின்றி
கூடல் கொண்டு உணர்வாலே ஒன்றிணைந்தோம்.

பல்துறைசார் பயிலுனரும் பட்டம் பெற்று
வெளியேற சமமான உரிமையில்லை
ஏற்றத்தாழ்வுகளோ ஏராளம்.

சாதி மத பேதமின்றி சமமான உரிமைதனை
சாத்திரமாய் படைத்தது இந்த சரித்திரக் கல்வி ஒன்றே.

வெடிக்க வைத்தால் உடல் இழக்கும் குண்டுகள் கூட
வேற்றுமையை காட்டுவதில்லை
இதனை வெடிக்க வைக்கும் உத்தமனோ தர்மசீலனோ
பித்தன் மகனோ அறிந்திட வேண்டும்.

எம்கல்வி எம்முரிமை எல்லாமே
குழி வீழ்ந்து அஞ்சலித்து நிற்கின்றோம்
மடை திறந்தும் நடை பிணமாய்.

நமது உரிமை நாடகங்கள் அரங்கேறும்
வேளைதனில் பார்வை இழந்த
பேதைகளாய் ரசிக்கின்றோம் மெய் இழந்து.

மடமையில் மூழ்கி மண்ணாய் போன நாட்கள்
மக்கி போகட்டும் கனாக்களை விட்டு
கண்விழித்து நம் உரிமைக்காய் விழித்தெழுவோம்.

நம்மை விட்டு பின் செல்லும் உரிமை
காற்றளவில் காலத்தை மாற்றலாம்
தடுக்காமல் நம் உரிமையை வேண்டு
மறுக்காமல் காலத்தை மாற்று



கவிஞர் சஜிரேக்கா சுதாகரன், திருகோணமலை (இலங்கை)

# பூமித்தாய்

நித்தம் நித்தம் பூமி
புதுமைகளை வழங்கிடும்
அற்புதத்தின் சாமியே.

மழை என்றும் வெயிலென்றும்
இரவென்றும் பகலென்றும்
அனிச்சையாய் செயல்களை
அளித்திடும் பூமியே.

பல்லுயிரும் மனிதனும் பாங்குடனே
பூமியிலே வாழ்வதற்கு
தண்ணீரும் காற்றும்
இயற்கையாய் தந்திடுமே.

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த
அந்த நாள் வாழ்வுதான் அமுதமான
பெருவாழ்வு அமைந்திட்ட காலங்களே.

இயற்கையை சுரண்டிடும்
சுயநல மனிதர்களி
பேராசையின் விளைவால்
காலநிலை மாறுதே.

தவறான செயலாலே கோபம் கொண்ட
இயற்கையும்தான் புயல் மழை காற்று என
ஆழிப்பேரலையாய் நம்மை
அழித்து விடும் உண்மையே.

மாசு தூசி இல்லாத அமுதமான காற்றும்
சுவையான குடிநீரும் வழங்கிடும் பூமியே
அனைத்து உயிருக்கும் தாயே.

"பூமித்தாயை" போற்றியே
மாசு இல்லா உலகமாய்
வரும் தலைமுறைக்கு அப்படியே
அமுதமாய் தந்திடுவோம்.



கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# பௌர்ணமி நிலவில்

நள்ளிரவு நேரத்தில்
ஒத்தையடி பாதையிலே

உன்னநெனச்சு மனசு
ஓயாமத் துடிக்கிறதே

காத்தடிச்சு கலைஞ்ச
மேகத்தைத் துரத்தியபடி

பௌர்ணமி நிலவு
பாய்விரிச்சுக் காத்திருக்கு!

சொல்லாத சேதியெல்லாம்
சுகமாகப் பேசிடவே

ஐந்தாறு மாசமா
அடைகாத்த நேசத்தை

அள்ளி அணைச்சு
ஆசையோட கொஞ்சிடவே

கொல்லும் ஊதக்காத்து
ஊசியாக் குத்தையிலே

தவிச்சுக் கெடக்கிறேன்
தங்கமே உனக்காக.

இதயங்கள் ஒன்றாகி
இனிதாய் வாழ்வோமே!



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# திருமண வாழ்த்து மடல்

அன்பின் அடையாளமாய்
ஆனந்தம் பேணியே
இல்லற தர்மத்தை கடைபிடித்தே
ஈதல் விருப்பமுடனே செய்தே
உதவிடும் நல்ல எண்ணம் கொண்டே
ஊர் புகழ பேர் வாங்கியே
எட்டு திக்கும் வாழ்த்தியே
ஏட்டின் அரிச்சுவடி போல்
சரித்திரம் படைத்தே
ஐயமின்றியே வாழ்ந்தே
ஒற்றுமையின் இலக்கணமாய்
ஓராயிரம் பேர் வாழ்த்த
ஔவையின் ஆத்திச்சூடி ஔசதம் போல
அஃதே இனிதாகவே
மணப்பெண் அலங்கார வல்லியாக,
வானத்து நட்சத்திரம் போல்
மின்னும் தாரையாக,
அழகு தேவதை போல
வானத்து நட்சத்திரம் மின்னும்
தாரகையாக மணப்பெண்ணும்,
பொன்மன ரத்தினமாம்
அழகுச்செல்வன் மணமகனும்,
நீவீர் ஒரு மனம் போல
வாழ்க்கை ஒரு பரிசாக,
பேர் சொல்லும் பிள்ளைகளை
அளவோடு ஈன்று,
இன்று போல் என்றும் வாழ இந்த பூமாலை
குழந்தைகளை பாமாலை ஆக்கி
மகிழும் உறவினரும், நண்பர்களும் .
வாழ்க வளமுடன்!




கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை


# மாயம்



நிலையானது எனநாம் நினைத்ததெல்லாம் விரைவில்
நிலையற்றது என்றுணர வைப்பது மாயம்!
காரிருளைக் களைந்திடும் ஒளியும் மாயம்!
உலகமே ஒரு மாயவனம்! பயணிக்கும் பாதைகளில்
பலவகைப் புதிர்கள்! வெற்றி தோல்விகளால்
விளைந்திடும் அனுபவங்கள்!உண்மையென நம்பிய
உறவுகளின் சுயரூபம் உணர்த்திடும் மாயம்!
இருந்த பொருள்கள் மறைவதும் மாயம்!
வெற்றிகளின் பின்னால் ஒளிந்திருக்கும் தோல்விகளின்
குரல்கள்! வாக்குறுதிகள் பலவும் காற்றில்
பறந்திடும் மாயம்! எல்லாம் ஒருநாள்
மாறிடும் என்றுணர்ந்தால் புரிந்திடும் மாயம்!
அகந்தை கரைந்து அமைதி மலர்ந்திடும்!
அதிசய நிகழ்வுகளை அளித்திடும் மாயம்!
தெளிவற்ற நிலையைக் குறிப்பதும் மாயம்!
நிலையற்ற வாழ்வில் நிம்மதியைத் தேடி
அலைகின்ற மனிதர்கள், உண்மைப் பொருளை
உணர்வதே ஞானம்! ஞானம் பெறுதல்
நமக்கெலாம் மாயம்! இறையருள் அவசியமே!
நம்பிக்கைச் சிறகுகளுடன் நாளைய கனவுகள்
நம்மை வழிநடத்தும் விந்தையே மாயம்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, பாண்டி

வைகறை நேரத்தில் எழுந்து
வாசல் பெருக்கி சாணம் தெளித்து
அழகான மாவுக் கோலங்களை வரைந்து
வண்ண நிறங்களை அடித்து
மகாலட்சுமியை வரவேற்பது
மாவுக்கோலத்தின் அடையாளம்
மாவுக்கோலம் போடுவதால்
சிட்டுக்குருவிகளை உணவு உண்ணுகிறது
பிற உயிர்களுக்கு உணவளிப்பது
நம் கலாச்சாரமாகும்
மாவுக்கோலம் போடுவதால்
வாசலுக்கு அழகைக்கூட்டுகிறது
மாவுக்கோலங்களில்
இரட்டைக்கோலம் போடுவதால் சுபமானது
ஒற்றைக் கோடுகளால்
மாவுக்கோலம் போடுவதால் அசுபமாகும்
மாவுக்கோலம் போடுவதால்
பளிச்சன கோலம் தெரியும்
கோலத்தை குனிந்து
போடுவதால் யோகாசனம்
மார்கழி மாதம் மாவுக்கோலம் போடுவது
தமிழரின் அடையாளமாகும்
மாவுக்கோலங்களால்
நம் எண்ணங்களை வெளிப்படுத்தலாம்
புள்ளி வைத்து மாவுக் கோலங்கள்
வரைந்தால் கோலம் அழகாகும்
கோலத்தின் புள்ளியை போலதான்
நம் வாழ்க்கையும் என்பதே நிதர்சனம்
கோலம் போடுவது வைத்து
உன் வாழ்க்கை வாழ்க்கையை
எப்படியென்று தெரிந்துக் கொள்ளலாம்



கவிஞர் மா. நந்தினி, சேலம்

# யார் அந்த அவள் ?

பிரம்மனையும் பிரம்மிக்க வைக்கும்
பிரம்மாண்டாம் அவள்

சித்தனையும் சித்தம் கலங்க வைக்கும்
சித்திரம் அவள்

போதிதர்மனையும் போதையாக்கும்
நோக்கு வர்மம் அவள்

கம்பனும் கவிபாட மறந்த
காவியம் அவள்

பிக்காசோவின் தூரிகையிலும்
பிடிப்படாத ஓவியம் அவள்

வள்ளுவனின் எழுத்தாணியும் சென்றடையாத
அதிகாரம் அவள்

எடிசனுக்கும் வெளிச்சமளித்த
சுடர் அவள்

இவ்வளவு ஏன்
Ai யாலும் எட்ட முடியாத
எட்டாவது அதிசயம் அவள்.

அவளை பற்றி கவிதை எழுத ஆரம்பித்தால்
பேனா மை தீர்ந்து விடும்.
குறிப்பேட்டில் பக்கங்கள் தீர்ந்து விடும்..
கால நேரம் மறந்து விடும்.



கவிஞர் ரா. ரமேஷ், திருப்பூர்

ஏதோ ஒரு
வாசிப்பில்
வெளிவருகின்றன
மண்மூடிப்போன
வேர்களின்
தியாகங்கள்



கவிஞர் அன்னலட்சுமி சீரவணன்

# தனித்த பாதை

தனித்த பாதைதனில்
தனிமையில் நடந்திட துணிவே!

தனித்த முடிவினில்
நேர்மையின் பரிசு வெற்றியே!


தனித்த சிக்கலில்
தனித்து மீண்டிட மகிழ்வே!

தனித்த துயரத்தில்
தனித்து வெளி வருதல் வீரமே!

தனிமை என்பது
கொடுமை என்றிடுவார் சிலர்!

தனிமை என்பது
இனிமை என்றிடுவார் பலர்!

தனிமையின் கருத்து
மாறுதலுக்கு உரியதுவே!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

வாய்மை வெல்லும்
வழித்தடை இன்றியே
தூய்மை கொண்டு
துவளாது தூரிகையாகும்

தோண்டித் தோண்டிப்
புதைத்து வைத்தாலும்
வண்டாய்ப் பறந்து
வன்மத்தை அகற்றும்

உண்மை சாகாது
உயிர் கொண்டெழும்
விண்ணையும் ஆளுமே
விழிப்போடு நீதியே

பொய்மையைத் தும்சமாக்கி
பொல்லாப்பைத் தகர்த்தி
மொய்மை ஜெயிக்கும்
மேன்மை கொள்ளுமே

சத்தியம் காப்பது
தர்மத்தின் வெற்றியே
எத்திலம் சென்றாலும்
எழுச்சியாய் நிற்குமே



வேதனைகள் சுமந்தாலும்
சோதனைகள் வந்தாலும்
சாதனை படைத்திடும்
சத்தியமான உண்மையே

கவிஞர் கிருஷ் அபி

# மாய உலகின் தேடல்!

வானம் சுருண்டு மறையுமா
சூரிய சந்திர நட்சத்திரங்களும்
கற்களாய் உருண்டு விழுந்திடுமா!

என் பாதை எங்கே
என்ற தேடலின் விதை
என்று விருட்சமாகும்!

உலகின் அழிவின் விழிம்பிலும்
தீராத ஆசையின் தேடல்கள்
தீராததே உள்ளத்தின் வேண்டுதல்கள்
உயிரின் கடைசி நொடிகளிலும்!

எங்கோ தோன்றி எங்கோ சேர்ந்திடும்
ஆற்றின் தேடல் என்னவொ!
எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்திடும்
மனிதரின் தேடல் எத்தனையோ!

எந்நாளும் தனிமரமாய் தனித்தே
இந்த தேடல் ஓடிடுமா! -இல்லை
இன்றே இதன் விடியல் புலர்ந்திடுமா!

ஆறறிவின் ஆணவமா
ஆசையின் ஆதிக்கமா
கடலின் நீர் பசியாக!

மனிதன் பூமியில் உலவுவதென்ன
மாயையான உலகின் ஆனந்தத்திற்காய்
இன்று காணும் உலகம்
என்றும் நிரந்தரமில்லையே
எனும்புரிதல் மனதில் உரைக்கனுமே!



இன்று வாழும் வாழ்வினில்
மனதில் நிறைவு காணனுமே!

பாதையின் தேடல் விடுத்து -உன்
பாதை உருவாக்க முனைந்திடு
பாதையின்றி தவிக்கும் உயிரே!

கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# மன்னிப்பாயா?

ஏக்கத்தில் நான்
உனக்கு தெரியுமா
அந்த சிறு பூந்தோட்ட
மாளிகையில்
உன் நினைவுகளை
சுமந்து உலவுகிறேன்
ஒரு கடிதம் எழுதினேன்
உனக்கு
என்ன கடிதம் என்கிறாயோ
மன்னிப்பு கடிதம் தான்
மன்னிப்பு என்ற வார்த்தையே
நம்மில் இல்லையென்றாய்
ஆனாலும் ஏதோ பிணக்கென்று
மனம் சொல்கிறது
மன்னிப்பாயா மனம் விட்டு
கேட்கிறேன்
அந்த வயல் வெளிகளில்
கை கோர்த்து சுற்றிய
நாட்களை மறந்து போனாயோ
பிரிவென்று ஒரு பரிசை
தந்துவிட்டாயே
நாட்களை நகர்த்தி நகர்த்தி
வைத்தாலும்
அது ஏக்கத்தையே திருப்பி தருகிறது
மனக்கூட்டில் ஓயாமல்
உன் சத்தங்கள்
ஏக்கத்தில் நான் தேடலின்
தேக்கத்திலும் நான்
முதலும் நீ முடிவும் நீயென்றோ
முடிவில்லாத நம் காதலில்
மன்னிப்பு ஏனடா
மனம் விட்டு பேசிவிடேன்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# மறக்குமா நெஞ்சம்?

பெற்ற தாய்தனை மகவு மறந்து நின்றாலும்
உற்ற தேகத்தை உயிர் பிரிந்து சென்றாலும்
நற்றவா! உனை நான்தான் மறப்பேனோ தந்தையே
இலட்சியக் கனவுகளோடு
காலடியில் நாலடி வைத்தாய்
காலத் தேரில் எனையேற்றி உலவ விட்டாய்
அறியாமை இருள் கிழித்து
ஞானவிடியல் ஆக்கினாய்
அரியாசனத்தில் அமரவைத்து
அரியாசனம் இல்லாமல் செய்வித்தாய்
பரவசமாய் விழியில் விழிப்புணர்வு
விளக்கேந்தியே பாதுகாத்தாய்
வரலாறு படைக்கும்
வசந்த மலராய் உருவாக்கினாய்
ஈடற்ற அறமும் ஈகைத் திறமும் நினதியல்பு
கூடற்ற பறவையாய் திரிந்தாலும்
கொள்வதில்லை அயர்வு
புல்லும் பூவும் முகிழ்க்க
புவனம் அனுமதிக்கும்
அல்லும் பகலும் அகமகிழ்ந்து
உதிக்கும் கிழக்கே
விடையைத் தேடியே வலம்வந்த
வினாக்களாய் அல்லாமல்
தடைகளைத் தாண்டி
என்னை உயரச் செய்தனையே
கருகி விடாமல் வளமான மலராக மலர்ந்தே
அருகிருந்தே நம்பிக்கை தந்தே
நந்தவனம் ஆக்கினாய்
விட்டில் பூச்சியாய் இல்லாமல்
பட்டாம்பூச்சியாய் பறந்தேன்
எட்டிக் காயையும் இன்செயலால்
கட்டிக் கரும்பாக்கினாய்
அறிவுடைமை தந்து அணிகலனாய்
எனை ஆக்கினாய்



அறிவுடையார் அணிவகுப்பில்
திருமகள் என்றும் பங்கேற்கவே
வள்ளுவரின் மறையும்
வைரமுத்துவின் உரையும் நல்கி
தெள்ளுதமிழின் நறுமணத்தை
என்மீது தெளித்து விட்டாய்/
மறக்குமா? கொஞ்சமும்!
மறக்குமா? நெஞ்சமும்!

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# கல் யானை

தும்பிக்கை அற்ற
கல்யானை ஒன்று

மதுரை மேலைக்
கோபுர வாயிலில்

என்றாவது கல்
தும்பிக்கை முளைக்காதா?

மீனாள் கண்
என்மீது படாதா?

இன்றும் நப்பாசையில்,
இடது வாயில் பக்கம்;


நம்பிக்கையின்றியும்;
நம்பிக்கையுடனும்;

நம்பிக்கைதானே வாழ்வு!



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

வெற்றியை நோக்க
வெறித்தனமாக உழைக்கும்
ஆண்களுக்கு
உறுதுணை பெண்ணே!




கவிஞர் மோனீஷா

ஏழைகளின் அன்றாட அன்னம்
எங்கும் எதிலும் தீராத மோகம்
அன்று சந்திப்பும் பிரிவும் ஆவியுடன்
அலைமோதும் தருணம் என்றும்
தீராக் காதலாய் தினம் தினம்
மனம் சந்திக்கும் காதலி தேனீர்.



கவிஞர் ம. செல்லமுத்து, பெரம்பலூர் மாவட்டம்

ஒனக்கொன்று
தெரியுமா? என்று
ஆரம்பிக்கும் ஒவ்வொரு
பேச்சிலும் அடங்கியிருக்கிறது
யாரோ ஒருவரின் இரகசியம்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# திருமண நாள் நினைவு!

நீயும் நானும் ; நீங்காது வாழ
இறைவன் எப்போ தீர்மானம் செய்துவிட்டான்
அதற்காக எத்தனை வருடங்கள் காத்திருப்பு


உன்னை நான் பார்த்ததுண்டு
என்னை நீயும் பார்த்ததுண்டு
அறியவில்லை நாம் அன்று
உனக்கு நான் எனக்கு நீயென்று!

அறிந்தோம் நம்மை திருமண நாளன்று
அன்பின் விலாசம் தேடிட
தேடினோம் வாழ்வின் அடித்தளத்தை
தொலைத்தோம் அன்றே நம் இருவரை!

எத்தனை காத்திருப்புக்கள்
எத்தனை மன்னிப்புக்கள்
எத்தனை தியாகங்கள்
அத்தனையும் கண்டது திருமண உறவிலே!

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்
நலம் சொல்லும் வாழ்த்துக்கள்
இன்றுவரை
இறைபக்தியில் எமைக் கொடுத்து
பறைசாற்றினோம் இன்றுவரை!

எத்தனை உறவுகள் வந்திடினும்
அத்தனையும் இன்பம் தந்திடும்
புரிந்துணர்வுடன் வாழும் வரை
பிரிவென்பது நமக்கில்லை
நீயும் நானும் காத்திருப்போம்
இறைவனே உன் ஆசீர் வேண்டியே இன்றுவரை!



கவிஞர் திருமதி. ஜூவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

# கைக்கெட்டியதா காணிநிலம்?

காணி நிலம் தேடி
பராசக்தியிடம் கையேந்திய பாரதியே!


தொட்டதெல்லாம்
பொன்னாகணும் ஆசையில்
கண்ட பூமியெல்லாம்
தனக்கே சொந்தமென
பேராசை மனிதர்களும்
பெரும் தனக்காரர்களும்
சுரண்டிக் கொண்டிருக்க

பூமியே கையளவுதானே.
பூமாதேவியே
கண் துஞ்ச இடமின்றி
மிஞ்சியது இனி ஏதென
ஒடும் தேசத்திலா நீ வாழ்ந்தாய்?

தென்றல் தரும்
சோலையும் தென்னைதரும்
இளநீரும் யாருக்குச் சொந்தம்
இத்தமிழ் மண்ணிலே?

மெல்ல மெல்ல மாறிவரும்
சூழலில் பாரதியே!

உன் கால காணிநிலமெல்லாம்
எங்கே போனதோ?
முத்துச்சுடர் நெருக்கடியில்
சுந்தரங்கள் காண்பதற்கு
இனி புது சுதந்திரங்கள்
தேடவேண்டுமோ?



வா வா பாரதி !
இன்னொரு சுதந்திரம்
கண்டிடுவோம்.
வா வா

தேடுகிறேனே அய்யனே!
நீ தேடிய அதே காணி நிலத்தை
மண்ணில் நான்
தேடித் திரிகிறேனே
எனக்காகவேனும்
பராசக்தியிடம் திரும்ப
இறைஞ்சி கேளேன்!

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

உறங்கியும் உறங்காமாலும்
ஓடிக்கொண்டே இருக்கும்
வாழ்க்கை ஓட்டம்.



கவிஞர் கார்த்திகா, கோயம்புத்தூர்


# அனந்தரம்

இனி எதுவுமே தேவையில்லை
இது மட்டுமே போதுமெனுமளவுக்கு,
மரணத்தைக்கூட
பொருட்டாகக்கருதாமல்
புறக்கணித்து,
பேரானந்தம்
ததும்பச்செய்கின்ற ஒன்று
உன் வாழ்வில் இடம்பெற்றுவிட்டால்

நீ ஞானியாகிறாய்
அல்லது
அடிமையாகிறாய்
அல்லது
பறவையாகிறாய்

உலகநிகழ்வுகள்
உன்னைச் சஞ்சலிக்கச்செய்யா
வானத்தில் சஞ்சாரிக்கும்
கரிச்சான் நீ

எந்த வகைக்குள்ளேனும்
அகப்பட்டுத் திளைத்துக் கிடக்கவே,
துயரங்களற்ற வெளிக்குள்
மிதந்தலையவே,
அனந்தரம்
ஆசைப்படுவாய்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# விடியல்

பாரதி கண்ட காக்கையும் குயிலும்
ஆற்றங்கரையில் சிறகுகளை உலர்த்தி
ஆகாயவெளியில் உலாப் போக.


வாழ்க்கைப் படகின் துடுப்புகளைத் தேடி
ஓய்ந்துபோன கால்கள்
ஓசையின்றிய மரணத்தில்
ஒய்யாரமாய் ஓய்வுபெறுகின்றன.

விடை தேடும் பயணத்தில்
விடியல் தேடும் விட்டில் பூச்சியாய்
தடைகளோடே பாதை நீள.

நேற்றைய எதிர்பார்ப்புகளை
துரத்திக்கொண்டே விடிகின்றன
ஒவ்வொரு விடியல்களும்.

தகிக்கும் வெயிலில் கூடையிலுள்ள
அத்தனை பூக்களும் மலர்ந்து சிரிக்க
வாடி நிற்கும் பூக்காரியின்
கோரிக்கை ஒன்றுதான்

"நாளைய விடியலாவது
நல்லதாய் வேண்டும்"



கவிஞர் பாத்திமா ரளீபா முபாரக், இலங்கை

# நியாயந்தானா?

மின்சாரம்
தடைபட்டதற்காக
கிளைகளை
வெட்டிச்சென்றனர் ஊழியர்கள்
கூடடைய வந்த குருவிகள்
இப்படி புலம்பித் தீர்த்தன
பாவிகள்
இப்படி செய்துவிட்டனரே!
கூடுகளை
சிதைத்தது கூட பரவாயில்லை
மரத்தின் அங்கங்களை
வெட்டி வீழ்த்திய
கொலைகாரர்களுக்கு
இந்த உலகத்தில்
தண்டனையே கிடையாதா?
இது தான்
கலிகாலம் என்பதோ!



கவிஞர் இளங்கோவன் மணியன், திருச்சி

# சிறப்பு விருந்து

மகன் பிறந்தநாள்
மகிழ்வுடன் கேட்டான்
சிறப்பு விருந்துஎன்ன?
மனமுவந்து செய்தாளன்னை
மகள் பிறந்தநாள்
மலர்ச்சியுடன் செய்தாள்
கணவன் பிறந்தநாள்
கனிவாய் சமைத்தாள்
கல்யாணநாள் வந்திடினும்
களிப்புடன் சமைத்தாள்
அவள் பிறந்தநாள்
அனைவரும் ஆவலாகக் கேட்டிட,
அலுப்பான புன்னகை
அவளுதிர்த்திட்டாள்
அடுப்பில் வேகுவது
அன்றும் அவளன்றோ?
அடுத்த அமாவாசை
அழகான சட்டத்தில்
அமைதியாக அவள்.
அவளுக்கு பிடித்த
அவள் சமைக்காத
அறுசுவை பதார்த்தம்
அடுக்கினர் படையலாக.



கவிஞர் ஷீலாதேவி, நாகர்கோயில்

## அந்த நாளில்

வெற்றியில் மனம்
வானில் பறத்தல்

நம்பிக்கை உச்சமாகுதல்
அடுத்த கட்ட நகர்வு

*****************

## பார்த்து கூடுதலாய்

நம்மைவிட
சவால்கள் குறைவாய்
இருப்பவர் பார்த்து

பதற்றப் பொழுதுகள்
அதிகம் இல்லாதவர் பார்த்து

பணிச்சுமைகள்
கொஞ்சமே இருப்பவர் பார்த்து

பணிநிறைவு அடைந்தவர்
பார்த்து

வசை மொழிகளை
சாதாரணமாய் எதிர்கொள்பவர்
பார்த்து.



குழுவிலிருந்து ஒத்துழைமை
கிடைப்பது பார்த்து.

அனுசரிப்பும் நெகிழ்வுத்தன்மையும்
ஊக்குவிப்பும் கொடுக்கும்
அதிகாரிகள் கிடைப்பது பார்த்து.

அப்ப எல்லாம்
கூடுதலாய் ஒப்பீடும்
பொறாமையும் வெளியே
சொல்லாட்டாலும்
உள்ளுக்குள்ளே.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

ரமணி ஆட்டோவிலிருந்து இறங்கி, அலைபேசியில், " நரேன். சார். எந்த ரூம்?" என்றான்.

"ரமணி ஆஸ்பத்திரிக்கு வந்தாச்சா? ரொம்ப நல்ல செய்தி. நீங்கள் இங்கே வரவேண்டாம். அங்கேயே நில்லுங்கள்.வசந்த் வருவான். அவன் சொல்கிற இடத்திற்கு கூட்டிட்டு போயிட்டு வர்றீங்களா?" என்றான் நரேன். திரும்பி, " வச்ந்த். நான் சொல்வதெல்லாம் நினைவிருக்கிறதல்லவா?. அன்று யானைகள் நம்மை விரட்டிய இடத்தில் இறங்கிக்கொள். சரியாக இந்த வரைபடத்திலே இருக்கிற மாதிரி நடந்தாய் என்றால் சரியாக அந்த சித்தரோட கல்லறை வரும். அதிலே தான் அந்த கற்பக செடி இருக்கிறது.

திசை காட்டுறதுக்கு இந்த காம்பஸை வச்சிக்க.. எப்படியாவது அந்தச்செடியைக் கொண்டு வந்து விடு. மற்றதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்.

சே! இந்த நேரத்திலே பார்த்து,அந்த யானைக்கூட்டம் வந்து நம்ம பிளானையே வீணாக்கிடுச்சி வச்ந்த்!கண்ணா.. நாலு கோடி மறந்துடாதே

ம்..ம்... அப்புறம் அந்த கல்லறைக்கு நீ போறதை யாரும் பார்த்துடக் கூடாது. அது ரொம்ப முக்கியம்" என்றான் நரேன்.

வசந்த், வெளியே எட்டிப்பார்த்த போது கண்ணன் ஒரு ஆட்டோவில் வந்து இறங்கினான்

"என்னடா கிணறு வெட்ட புறப்பட்ட போது பூதம் கிளம்பின மாதிரி இருக்கு" என்றான் வசந்த் சலிப்பாக.

"என்ன?" என்று வெளியே எட்டிப்பார்த்த நரேன், "ஆமா இவன் எங்கே இங்கே வந்தான்" என்று முணு முணுத்துக் கொண்டே, "இனி நீ ஆட்டோவில் போ ஏறாமல் இருப்பது வீண் சந்தேகங்களை ஏற்படும். என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான்.

" இதெல்லாம் ஒரு பெரிய விசயமாப்பா?. டீக்கடை இங்கே அங்கே என்று கொஞ்சம் அலைத்து விட்டு திரும்பவும் மருத்துவ மனைக்கு வந்து இறங்கினா.. நொந்து போய் வீட்டுக்குத் திரும்பப் போகிறான். அப்புறமா மெதுவாக காட்டுக்குள்ளே போனாப் போச்சு"

"சூப்பர். டேய் வச்ந்த், நீயும் எப்பவாவது மூளையைக்கசக்க ஆரம்பித்திருக்கிறாய்...ம்.. நடத்து" என்று வசந்தின் முதுகில் தட்டிய போது" ஆ" என்றான் நரேன்.

"என்னடா?" என்று பயந்தான் வசந்த்.
"ஒண்ணுமில்லே...உன் முதுகிலே தட்டப்போய் அடிபட்ட என் கை வலிக்க ஆரம்பிச்சிடுச்சி."

"வெற்றியோடு திரும்பி வா. நாம் இன்றைக்கு கொண்டாடி விடுவோம்" என்றான் நரேன்.
கீழே வந்து, ரமணியின் ஆட்டோவில் ஏறி அங்கேயிருந்தக் கோயிலுக்குச் சென்றான்.

பின்னாலே கண்ணன் ஆட்டோவில் தொடர்வதை தெளிவு படுத்திக்கொண்டான். கோயிலிலிருந்து அருகிலுள்ள ஹோட்டலில் வந்திறங்கி, ஒரு வடையும் காபியும் சாப்பிட்டான்.

பின் வந்து ஆட்டோவில் ஏறியதும், கண்ணன் வந்த ஆட்டோ பின் தொடர்வதை தெளிவு படுத்திக்கொண்டவன், "ரமணி, கொஞ்சம் ஆஸ்பத்திரிக்கு திரும்பிப் போக வேண்டுமே" என்றான்.

"என்ன சார். நரேன் சார் உங்களை காடுப்பக்கமா அழைச்சிட்டுப் போகச் சொன்னாரு. நீங்க திரும்ப ஆஸ்பத்திரிக்கு திரும்பிப் போக வேண்டும்கிறிண்ங்க"

"பர்சை மறந்து வச்சிட்டு வந்துட்டேன். காசு எடுத்துட்டு வரல்ல...ஹோட்டலேயும் கடன் தான் சொல்லிட்டு வந்தேன்"

"காசு ஒரு மேட்டரா சார். அப்பால் வாங்கிட்டா போச்சி.. வேற எங்கேயாவது போகணும்ணா சொல்லு சார்." என்றான் ரமணி

"அதெல்லாம் ஒண்ணுமில்லேப்பா.... நீ ஆஸ்பத்திரிக்கு திரும்பிப் போ. என்னை இறக்கி விட்டுட்டு ஒரு ரவுண்டு அட்ச்சிட்டு வா. அப்பால காட்டுப் பக்கம் போலாம்" என்றான் வசந்த்.

"என்னமோ தலையச்சுற்றி மூக்கைத் தொடுகிறீங்க.. சரி" என்று மருத்துவமனையில் வசந்தை இறக்கி விட்டு விட்டு ஒரு சுற்று சுற்றி விட்டு திரும்பவும் மருத்துவமனைக்கு வந்தான்.

ஆட்டோவிலிருந்து இறங்கிய வசந்த் மருத்துவமனைக்கு வந்து ஒளிந்து நின்று கண்ணன் வந்த ஆட்டோ திரும்பிச் சென்ற பிறகு மெதுவாக, ரமணியின் ஆட்டோவில் ஏறி" இப்போ நீ அந்த காட்டு பகுதிக்கு வண்டிய விடுப்பா" என்றான்.

அடுத்து இருந்த சந்தின் மறைவில் ஒளிந்து நின்ற கண்ணன் ஆட்டோ அவனை பின் தொடர ஆரம்பித்தது.

தொடரும்...

வகுப்பறை எப்போதும் சத்தத்தால் நிரம்பிக்கொண்டே இருக்கும். அன்று மட்டும் பேரமைதியாக இருந்தது.
வைட் போர்டு மார்கர் தரையில் விழும்போது எழும் டிக் என்ற ஒலி கூட, முழு வகுப்பறையையும் அதிர வைப்பதுபோல் இருந்தது.

அது பாடம் நான்கின் நேரம். அப்பாடவேளைக்கு முன் எழும் கூச்சலோடு தான் வழக்கமாக வகுப்பறை இருக்கும். ஆனால் இன்று, பயம் சத்தத்தை விழுங்கியிருந்தது.

நைலா வகுப்பு மோனிட்டர். பாட ஆசிரியர் வரவில்லை என்பதால், வகுப்பு ஆசிரியரை அழைத்து வந்திருந்தாள். உள்ளே வந்த ஆசிரியரைப் பார்த்ததும், பிள்ளைகள் இன்முகத்தோடு எழுந்து வரவேற்றார்கள்.
ஆனால், அவரின் முகத்தில் அன்று வழக்கமில்லாத கோபம்.

"இதை யார் செய்தது?"

அவரின் குரல் அமைதியாக இருந்தாலும், அதில் துடித்தது கோபம். அனைவரின் பார்வையும் ஒரே திசையில் சென்றது. அங்கே! பூச்சாடிகள் வீழ்ந்து உடைந்து, சில்லுகளும் செம்மண் களிகளும், பூச்செடி இலைகளுமாக அலங்கோலமாக சிதறிக்கிடந்தது. யாருமே பேசவில்லை.

பன்னிரண்டு பெண் பிள்ளைகளும், பத்து ஆண் பிள்ளைகளும் இருந்தார்கள். இந்த இருபத்திரண்டு மாணவர்களுக்குள் தான் குற்றம் செய்தவர் இருக்க வேண்டும். அல்லது பலரின் தவறாக கூட இருக்கலாம்.

"யார் செய்தது?" மீண்டும் கேட்டார் ஆசிரியர்.

மௌனம் மட்டும் பதிலளித்தது.

"இப்போ சொல்லாவிட்டால்... எல்லோரையும் அடிப்பேன்."என்றார்.

அடுத்த நிமிடம், பக்கத்து வகுப்பிலிருந்து கம்புடன் வந்தார்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

யார் செய்தது என சலசலப்பு தொடங்குவதற்குள், "கை நீட்டுங்க!" என்றார்.

ஒவ்வொரு கையும் அடியில் சிவந்து, "ஆ... ஊ..." என்ற ஒலியில் தடவிக்கொண்டது. அமைதி மீண்டும் விழுந்தது. அடித்து முடிந்ததும், ஆசிரியர் கம்பை ஓரமாக வைத்துவிட்டு அமர்ந்தார். சற்று நேரம் மௌனம். பின்னர் மெதுவாக சொன்னார்.

"பிள்ளைகளா... நான் அடிக்கணும் என்று நினைக்கல. எனக்கு கோபமும் இல்லை."

அந்த வார்த்தைகளில், அடி வாங்கிய கைகளுக்கு மேலே, மனங்களில் வலி ஊறியது.

"நாமெல்லாம் ஒரே வயிற்றுப் பிள்ளைகள் மாதிரி. இந்த வகுப்பறையும் அப்படிதான். ஒருவர் விட்டுக் கொடுத்தால், தவறு செய்தவன் தன் தவறை உணர்ந்து முன்வந்து ஒத்துக்கொள்ள முடியும்." அவர் கண்கள் மென்மையானது.

"எதிரியின் மனம்கூட அன்பால் மாறும்," என்று சொல்லிவிட்டு நபிமொழிகளை கூறத் தொடங்கினார்.
"அல்லாஹ் ஒருவருக்கு மன்னிப்பின் காரணமாக அவனின் மரியாதையையே அதிகரிக்கிறான்."

"பிள்ளைகளா... விட்டு கொடுத்து மன்னிப்பவன் தாழ்வடைவதில்லை. மாறாக அல்லாஹ் அவனின் மரியாதையை உயர்த்துகிறான் என்று நபி (ஸல்) சொன்னார்கள்..."

"ஒரு முஸ்லிமின் குறையை மறைத்துக் காப்பவன், மறுமைநாளில் அல்லாஹ் அவனின் குறையையும் மறைத்துக் காப்பான்." நபி முஹம்மது (ஸல்) கூறினார்கள்.
"தவறு செய்தவனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து அவமானப்படுத்துவது வீரமல்ல.அவனுக்கு திருந்தும் வழி காட்டுவதே உண்மையான உயர்வு..."

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

"தவறு செய்தவன் அதனை உணர்ந்து அல்லாஹ்விடம் திரும்புவதே உண்மையான வெற்றி." நபி முஹம்மது (ஸல்) கூறினார்கள்
"ஒருவர் முன்வந்து 'நான் செய்தேன்' என்று சொல்வது தோல்வி அல்ல. அது ஒரு புதிய தொடக்கமாக தான் மாறும்.

"விட்டு கொடுப்பது தோல்வி அல்ல,அது மனதின் உயரம். ஒருகூட்டம் தவறை ஏற்றுக்கொண்டால், அந்த தவறு குற்றமாக இல்லாமல் பாடமாக மாறும்." ஒவ்வொரு சொல்லும் வகுப்பறை வைட் போட்யில் அல்ல பிள்ளைகளின் மனங்களில் எழுதப்பட்டது. அந்த நிமிடம், கடைசி வரிசையிலிருந்த ஒரு சிறிய கை மெதுவாக உயர்ந்தது.
"சார்... அது நான்... பதட்டத்தில் கைதவறி தெரியாம வீழ்ந்து உடைஞ்சிடுச்சு..."

அனைத்து சக நண்பர்களிடமும் நான் செய்த தவறுக்கு நீங்களும் தண்டிக்கப்பட்டுட்டிங்கள் மன்னித்து விடுங்கள் என்றான். ஆசிரியர் எழுந்தார். அந்த பிள்ளையை அடிக்கவில்லை. அருகில் வந்து, அவனின் தோளில் கை வைத்தார். "சொன்னதுக்கு நன்றி, மகனே. இதுதான் துணிச்சல்." வகுப்பறை மீண்டும் சத்தமாயிற்று ஆனால் இப்போது அது அச்சத்தால் அல்ல. மனங்கள் நெருக்கத்தின் லேசான ஓசை.


"அனைத்து பிள்ளைகளும் அந்த மாணவனிடம் கைக்கொடுத்து எங்களையும் மன்னித்து விடுங்கள் சேர்"இனி இது போல நாம் தவறு செய்ய மாட்டோம் என தமக்குள் உறுதி எடுத்தார்கள். அடுத்த பாடவேளைக்கான மணி அடிக்கப்பட்டது.தரம் பத்தாம் வகுப்பு மாணவி பாடத்துக்காக ஆசிரியரை அழைக்க வந்தாள். அனைவரிடமும் தான் தவறாக நடந்திருந்தால் கோபபட்டு விட வேண்டாமென கூறிவிட்டு அப்பிள்ளையோடு வெளியேறினார்.
மாணவர்கள் தம்மிடம் இருந்த பணத்தை சேகரித்தார்கள் புதிய பூச்சாடியும் பூச்செடியும் வாங்கி விடுவதற்காக! பெண்பிள்ளைகள் வகுப்பறையை சுத்தப்படுத்தினார்கள்.

தூரத்தில் இவைகளை கண்ட வகுப்பாசிரியர் மனமும் நெகிழ்ந்து விட்டது.
அன்று, பூச்சாடிகள் உடைந்தது. ஆனால் பல மனங்கள் ஒட்டிக்கொண்டது.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

## வாசிப்பனுபவம்

### கட்டுரைகள் - இரஜகை நிலவன் - ஒரு பார்வை




எழுத்தாளர் இரஜகை நிலவன் மும்பை வாழ் தமிழ் எழுத்தாளர்களில் முக்கியமானவர். தமிழ்நாட்டின் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். இரஜகிருஷ்ணாபுரம் என்னும் கிராமத்து பெயரையே சுருக்கி இரஜகை என பெயருக்கு முன் சேர்த்துக் கொண்டார். சிற்றிதழ்கள் மூலம் சினேகமானவர். எழுத்தையும் வாசிப்பையும் இரு கண்களாகக் கொண்டவர். நாவல், கட்டுரை, கவிதை, சிறுகதை என பத்துக்கும் மேற்பட்ட தொகுப்புகள் வெளியிட்டுள்ளார். என் கனவுகள் உன் காலடியில் என்பது இரஜகை நிலவனின் புதிய கட்டுரைத் தொகுப்பு.

தேவநேயப் பாவாணர் ஒரு தமிழ்நாட்டுத் தமிழறிஞரும் சொல்லாராய்ச்சி வல்லுநருமாவார். இவர் நாற்பதுக்கும் மேலான மொழிகளின் சொல்லியல்புகளைக் கற்று சொல்லாராய்ச்சிகள் செய்துள்ளார். மறைமலை அடிகளார் வழியில் நின்று தனித்தமிழ் இயக்கத்திற்காக உழைத்தார். தேவநேயப் பாவாணர் குறித்து பலர் எழுதியுள்ளனர். ஆராய்ச்சிச் செய்துள்ளனர். எழுத்தாளர் இரஜகை நிலவனும் தேவநேயப் பாவாணர் எழுதிய மொழி நூற் கட்டுரைகள் என்னும் நூலைக் குறித்து ஆய்வுச் செய்து எழுதியுள்ளார். ஒப்பியல் இலக்கணம், ஒப்பியற் சிறப்புகளை பாவாணர் குறிப்பிட்டுள்ளார் என்கிறார். திராவிட மொழி என்பது ஒன்று எனினும் இன்று பதினான்காக விரிந்துள்ளது என்கிறார். திராவிட மொழிகள் எத்தனை இருப்பினும் அவையின் தாய் தமிழே என்று குறிப்பிட்டதைக் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டுரையின் மூலம் மக்களுக்கு தமிழ் உணர்வை ஊட்டியுள்ளார் ஆசிரியர்.

வள்ளுவர் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரம் முதலில் எழுதியிருந்தாலும் இரண்டாவதாக எழுதிய அதிகாரம் வான் சிறப்பு. முறைப்படி பார்த்தால் இதுவே முதல் அதிகாரம். கடவுள் வாழ்த்து ஒரு தொடக்கம். வள்ளுவரின் வான் சிறப்பு குறித்து எழுதியுள்ளார் ஆசிரியர். வான் நின்று பெய்தாலே வளம்

திரு பொன். குமார்

## வாசிப்பனுபவம்

வந்து கூடும் என்கிறார். வாழ்க்கைத் துணை நலம் என்னும் அதிகாரத்திலும் வள்ளுவர் பாடியதைக் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவர் எழுதிய வான் சிறப்பை விட இரஜகை நிலவன் வான் சிறப்பு எழுதியது ஒரு தனி சிறப்பு.

உன் காலடியில் என் கனாக்கள் என்பது ஒரு சிறிய கட்டுரை. வாழ்வில் வெற்றி பெறுவதற்கான சூட்சுமங்களைத் தெரிவித்துள்ளார். வெற்றியின் இரகசியங்கள் மனிதர் காலடியிலேயே கிடக்கின்றன என இரகசியத்தைக் கூறியுள்ளார்.

மனித வாழ்க்கையில் போராட்டம் என்பது பொது. ஆனால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான போராட்டம் இருக்கும். ஐந்தறிவுகள் வாழும் வரை போராடுகிறது. சாகும் வரையும் போராடுகிறது. இரஜகை நிலவன் வாழும் வரை போராடு என்னும் கட்டுரையை எழுதியுள்ளார். வாழ்க்கை மனிதர்களை போராட்டத்திற்கே அழைக்கிறது என்கிறார். வாழ்க்கையின் குழந்தைப் பருவம் முதல் கிழந்தைப் பருவம் போராடியேயாக வேண்டும். போராட்டத்தை வாழ்க்கையின் ஒரு பகுதி என்று தெரிவித்து வாழும் வரை போராடு என்று நம்பிக்கை கூட்டியுள்ளார்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பது திருக்குறளில் இடம்பெறும் ஒரு வரி. எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே இருக்க வேண்டும், அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது என்பது இதன் பொருள்.

இரஜகை நிலவனும், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்று ஒரு கட்டுரை எழுதியுள்ளார். உயர்வாகவே எதையும் சிந்தித்து செயல் படு என்கிறார். அவ்வாறு செயல் பட்டால் உயர்வு நிச்சயம் என்கிறார். வானத்தை வசப்படுத்த முயற்சிச் செய் அடிவானமாவது வசப்படும் என்று நம்பிக்கையூட்டியுள்ளார்.

இயேசு உயிர்த்தெழுந்த தினத்தை கிருஸ்துவர்கள் கொண்டாடி வருகின்றனர். உயிர்த்தெழுந்தார் தேவ மைந்தன் கவிதையில் இயேசு குறித்த பல்வேறு செய்திகளை தெரிவித்து இயேசு உயிர்த்தெழுந்தது உண்மை என்கிறார். ஏன் உயிர்த்தெழுந்தார், எப்படி உயிர்த்தெழுந்தார், எவருக்காக உயிர்த்தெழுந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

திரு. பொன். குமார்

வாசிப்பனுபவம்

தொகுப்பின் நிறைவு கட்டுரை தாய்த் தமிழுக்கு மணிமகுடம் சூட்டுவோம். தன்னால் முடிந்த அளவு இரஜகை நிலவன் தாய்த்தமிழுக்கு மணிமகுடம் சூட்டியுள்ளார். தமிழை பாரதியும் பாரதிதாசனும் பாடிய விதத்தைக் காட்டியுள்ளார். பாரதிதாசன் தமிழை உயிருக்கு நேர் என்றார். ஆசிரியர் உயிருக்கு மேல் என்கிறார். குறிப்பாக மாணவர்களுக்கு தமிழைப் போற்ற, தமிழுக்கு மணிமகுடம் சூட்ட அறிவுரை வழங்கியுள்ளார்.

எழுத்தாளர் இரஜகை நிலவன் எழுதிய கட்டுரைகளில் தேவநேயப் பாவணர் எழுதிய மொழி நூற் கட்டுரைகள், வான் சிறப்பு, சித்தர் இலக்கியங்கள், தமிழுக்கு மணி மகுடம் சூட்டுவோம் என்னும் கட்டுரைகளே முதன்மையானவையாக உள்ளன. ஆய்வு அடிப்படையில் எழுதப்பட்டவையாக இருக்கின்றன. மற்றவை வாழ்வியல் கட்டுரைகள். அனுபவத்தை வெளிப்படுத்துகின்றன. அறிவுரைப்பவை என அடையாளம் பெறுகின்றன. காமராஜர் குறித்தது மட்டும் தனித்து காணப்படுகின்றன. கட்டுரைகள் என்றாலும் எளிய மொழியிலேயே எழுதியுள்ளார். என் கனவுகள் உன் காலடியில் என்னும் இக்கட்டுரைத் தொகுப்பு மாணவர்களுக்கு தமிழ் அறிவை ஊட்டும்.




திரு பொன். குமார்

கட்டுரை

## இளமைக்காலமும் கல்வியும்



திருநெல்வேலி மாவட்டம் சாலை நயினார் பள்ளிவாசல் என்னும் சிற்றூரில் 1930 செப்டம்பர் 6-ஆம் தேதி பிறந்தார். இவருடைய இயற்பெயர் மகாலிங்கம். தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தன் ஊரின் பெயரையும், சங்க காலப் புலவர் ஒருவரின் பெயரையும் இணைத்து 'சாலை இளந்திரையன்' என மாற்றிக்கொண்டார்.

## கல்விப்பணியும் ஆய்வுப் பணியும்

டெல்லி பல்கலைக்கழகத்தில் நீண்ட காலம் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். டெல்லியில் தமிழ் வளர்ச்சிக்காக இவர் ஆற்றிய பணிகள் ஈடு இணையற்றவை.
மறைமலையடிகள் குறித்த இவரது ஆய்வு மிகவும் குறிப்பிடத்தக்கது.
புதிய காலத் தமிழ் இலக்கியங்களைப் பகுப்பாய்வு செய்து, நவீனத் திறனாய்வு முறைகளைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தினார்.

## இலக்கியப் பங்களிப்பு

சாலை இளந்திரையன் கவிதை மற்றும் உரைநடை என இரண்டிலும் சிறந்து விளங்கினார். இவரது படைப்புகளில் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளும், பகுத்தறிவுச் சிந்தனைகளும் மேலோங்கி நிற்கும்.

## முக்கிய நூல்கள் சில:

- சிலம்பின் சிறுநகை
- தமிழ்க் கனவு
- நவீனத் தமிழ் இலக்கியம்
- புரட்சி முழக்கம் (கவிதைத் தொகுப்பு)
- சமுதாய நோக்கு

திரு அ. வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

"மனிதனை மனிதனாக மதிக்கும் பண்பு வளர வேண்டும்; தமிழ் மொழியின் மேன்மை உலகெங்கும் பரவ வேண்டும்" என்பதே இவரது எழுத்துக்களின் மையக்கருவாக இருந்தது.

### சமூகப் பணிகள்




இவர் வெறும் எழுத்தாளராக மட்டும் தங்கிவிடாமல், களப்பணியாளராகவும் இருந்தார். டெல்லி தமிழ்ச் சங்கம்: டெல்லியில் தமிழர்கள் ஒருங்கிணைந்து செயல்படவும், தமிழ் கலாச்சாரம் வளரவும் அடித்தளமிட்டார். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்: இதன் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தார்.

அரசியலிலும் சமூக இயக்கங்களிலும் ஈடுபாடு கொண்டு, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தார்.

### விருதுகளும் அங்கீகாரங்களும்

இவரது இலக்கியப் பணிகளைப் பாராட்டித் தமிழக அரசு இவருக்குப் 'பா someவேந்தர் பாரதிதாசன் விருது' வழங்கிச் சிறப்பித்தது. மேலும் பல்வேறு இலக்கிய அமைப்புகள் இவருக்குப் பல பட்டங்களை வழங்கிக் கௌரவித்தன.

### மறைவு

சாலை இளந்திரையன் நெஞ்சக நோயால் நீண்ட நாள்களாக அவதிப்பட்டு வந்தார். அவர் 04.10.1998 ஆம் நாள் மரணமடைந்தார். அவரது விருப்பப்படியே அவரது உடல் சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஆய்விற்காக அளிக்கப்பட்டது.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

## அனுபவம்

## மெதுவாகதான்

## வாழ்க்கையை

## கற்றுக் கொடுக்கும்

அகமும் தமிழே — முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு — அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு — சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa — www.aagaramuthala.com — aagaramuthala@gmail.com